1973 மார்ச் 19]

பிரதம அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை 1970-ம் ஆண்டு செப்டம்பரிலே நியமித்தார்கள், அந்தக் குழு சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. மெட்ரோப்பாலிட்டன் டிரான்ஸ்போர்ட்டுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அக்குழு கூறியிருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் இன்னும் டெல்லி அரசாங்கத்தின் ஆய்விலே இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சீசன் டிக்கட்டின் மூலம் வருகிற வருமானம் இப்பொழுது குறைந்திருப்பதாகவும், அதற்குக் காரணம், பலர் ஓசியிலே பயணம் செய்வதாகவும் செய்திகள் வருகின்றன. இப்பொழுது ரெயிலிலே ஓசியிலே பயணம் செய்தால் தண்டனை விதிப்பதைப் போல, பஸ்ஸிலே ஓசியிலே பயணம் செய்தால் தண்டனை அளிக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 7,000 சீசன் டிக்கட்டுகள் விற்பனையாகின்றன. ஆனால் இப்பொழுது பிப்ரவரியிலே 6,800 என்கின்ற அளவிலேதான் வந்திருக்கிறது. ஆகையினாலே, ஓசியிலே பயணம் செய்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமானது அல்ல.

இருந்தாலும், ஓசியிலே பயணம் செய்கின்றவர்களைத் தடுக்க வேண்டுமென்ற வகையில், மோட்டார் வாகன விதிகளைத் திருத்தி, இனி டிக்கட் இல்லாமல் பயணம் செய்வார்களானால், இரண்டு ரூபாயோ, அல்லது பஸ் புறப்பட்ட இடத்திலேயிருந்து வருகின்ற கட்டணமோ, எது அதிகமோ அது வசூலிக்கப்படும் என்று விதிகள் திருத்தப்படுகின்றன.

சென்னை-வடபுறம் பாக்கம் வழித்தடம்

* 428. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— மு 10

(அ) வழித்தடம் எண் 48-பி பேருந்துக்களை வடபுறம் பாக்கத்திலிருந்து விளங்காடு பாக்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை வட்டத்தில் முக்கியமான ஊர்களை இணைக்கக்கூடிய இந்த நீட்டிப்பைச் சிக்கிரமாகப் பரிசிலனை செய்து அரசாங்கம் அமலுக்குக் கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பாரிமுனையிலிருந்து விளாங்காடு பாக்கம், மின்ட் வழியாக ஒரு பஸ் விடுவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

பெட்ரோலுக்குப் பதிலாகக் கெரோசின் உபயோகப்படுத்துதல்

* 429. வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை சி. ஐ. டி. உணவு பிரிவுப் போலீஸ் டிப்டி-சூப்பரண்டன்ட் மற்றும் சர்க்கிள், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர் 21—7—1971 அன்று கும்பகோணத்தில் ஒரு லாரி, பெட்ரோலுக்கு பதில் கெரோசின் எண்ணெயை டாங்கியில் பிடிக்கும்போது கண்டுபிடித்தது உண்மையா?

(இ) ஆம் எனில், லாரி உரிமையாளர் பெயரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) லாரி உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கும்பகோணம் சப்-மாஜிஸ்ட்ரேட் அவர்களால் ரூ. 20 அபராதம் விதிக்கப்பட்டது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, மின்சார வெட்டு ஏற்பட்டு இருக்கிற இந்த நேரத்திலே இப்படி லாரிகளுக்கு மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள். அதைத் தடுப்பதற்கு லாரி வைத்திருக்கிறவர்கள்மீது மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. அதை சப்ளை செய்யக்கூடிய பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: லாரி வைத்திருக்கின்றவர்கள் மீது மட்டுமல்ல, மண்ணெண்ணெய் லாரிகளுக்கு விற்பனை செய்கின்றவர்கள், டிரைவர்கள், கண்டக்டர்கள் ஆகியவர்கள் மீது எல்லாம் வழக்கு பதிவுசெய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படுகிறது. அதைச் சோதனை செய்வதற்காக 55 ஹைட்ரோ மீட்டர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்குக் கொடுக்க, ஏற்கனவே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.